TNTT080001562024

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்.
முன்னிலை: திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன், M.A., M.Phil., L.L.M.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்.
திருவள்ளுவராண்டு 2057–ம் வருடம் சித்திரைத் திங்கள் 16 ம் நாள் புதன்கிழமை
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதன்கிழமை
அசல் வழக்கு எண்.136/2024
**CNR.No. TNTT-08-000156-2024**

1.வேம்பு
2.சரண்யா சசிகலா
3.அருள்சுதாகரன் ... வாதிகள்

/எதிர்/

1.லேயாள் முத்தம்மாள்
2.செல்லத்துரை
3.அலிஸ் வசந்தி
4.ஆரோன் முத்துபாண்டி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஈஸ்டர் கமல் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆ.ஜெயராஜ் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (29.04.2026) இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்....

## தீர்ப்புரை

தாவா சொத்தினை 1ம் வாதி மற்றும் 1ம் வாதியின் வாரிசுகள் அமைதியான முறையில் அனுபவம் செய்வதை பிரதிவாதிகள் எவ்வித இடைஞ்சலும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:37:59 +0530

**2. வழக்குரை சுருக்கம்**

அ)ஏரல் வட்டம், வெள்ளமடம் கிராமம், வைத்தியலிங்கபுரத்தில் உள்ள தபசில் சொத்தானது 2004ம் ஆண்டு முதல் 1ம் வாதியின் மனைவியான மல்லிகாவின் அனுபவத்தில் இருந்து வந்தது. மேற்படி மல்லிகா 20.01.2010ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி தபசிலில் கட்டப்பட்டுள்ள கதவு எண். 8/73A வீட்டிற்கு மல்லிகா பெயரில் வீட்டு வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது. தபசில் சொத்திலுள்ள வீட்டிற்கு 2004 –2005ம் ஆண்டிற்கு வீட்டு தீர்வை ரசீது உள்ளது. 2004–2005 முதல் 2015–2016 வரையில் வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டதற்கான கிராம ஊராட்சி தலைவரின் சான்று அறிக்கை உள்ளது. 1ம் வாதி தபசில் சொத்தில் குடிசை கட்டி சுமார் 25 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வந்துள்ளார்.

ஆ)கடந்த 2004ம் ஆண்டு தபசில் சொத்தில் உள்ள கதவு எண்: 8/73A கொண்ட குடிசை வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்ததின் பேரில் நாசரேத் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து பார்வையிட்டு, தபசில் சொத்தானது மாட்டுத்தொழுவமாக உள்ளது என்று விண்ணப்பப்பதிவு எண்.33/04.05 நிராகரிக்கப்பட்டது. 1ம் வாதி மற்றும் அவரது வாரிசுகளான மகள் சரண்யா சசிகலா, மகன் அருள்சுதாகரன் ஆகியோருக்கு மட்டுமே தபசில் சொத்தில் உரிமையும் அனுபவமும் உள்ளது. பிரதிவாதிகளுக்கும் தபசில் சொத்தில் எவ்வித உரிமையும், அனுபவமும் கிடையாது. தபசில் சொத்தினை அடுத்து கிழக்கு மற்றும் தெற்கு பக்கம் 1ம் பிரதிவாதியின் காலிமனை இருந்து வருவதை பயன்படுத்தி கடந்த 18.07.2024ல் தபசில் சொத்தில் கட்டியுள்ள வீட்டிற்கு கிழக்கு மற்றும் தெற்கு பக்கமுள்ள காலிமனையில் சுமார் 2 மீட்டர் அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்ய பிரதிவாதிகள் முயற்சி செய்தனர்.

இ)இதனையடுத்து, 1ம் வாதி பிரதிவாதிகளை நேரில் அழைத்து ஏன் தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படிதான் செய்வோம், உன்னால் முடிந்ததை பார் என்று கூறிவிட்டனர். பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:02 +0530

முயற்சியை தடுக்க தபசில் சொத்தை சுற்றி 2018–2019 ம் ஆண்டுகளில் 1 ம் வாதி பென்சிங் வேலி அமைத்துள்ளார். 1 ம் வாதி தபசில் சொத்தில் சுற்றியுள்ள காலி இடங்களில் கம்பிவேலி அமைக்க 2018 ல் தயாரான போது பிரதிவாதிகள் கிழக்கு மற்றும் தெற்கு பக்கத்தில் கம்பிவேலி அமைக்க கூடாது என்றும், மீறி அமைத்தால் உடைத்து நொறுக்கி விடுவோம் என்று வர்மித்தனர்.

ஈ)2024 ல் மார்ச் மாதம் வாதிகள் மீண்டும் கம்பி வேலி அமைக்க முயன்ற போது பிரதிவாதிகள் தடுத்து இடையூறு செய்தனர். பிரதிவாதிகளின் செய்கைகளை தாக்குபிடிக்க முடியாமல் 1 ம் வாதி நாசரேத் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவினை காவல் நிலையத்தார் வாங்க மறுத்து உரிமையியல் பிரச்சனை அதனால் நீதிமன்றத்தில் போய் தீர்வு காணுங்கள் என்று கூறிவிட்டனர். 1 ம் பிரதிவாதியின் கணவரும் மற்றும் 2, 3, 4 பிரதிவாதிகளின் தந்தையுமான பரமானந்தம் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக இருந்த செல்வாக்கினை பயன்படுத்தி 2008 ம் ஆண்டில் இருந்து 1 ம் வாதிக்கு இடைஞ்சல் செய்து வந்துள்ளார். எனவே, தாவா சொத்தினை வாதிகள் அமைதியான முறையில் அனுபவம் செய்வதை பிரதிவாதிகள், அவரது வகையாட்கள் எவ்வித இடைஞ்சலும் செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3.எதிர்வழக்குரை சுருக்கம்</u>**

அ)வழக்குரை சங்கதிகள் மறுக்கப்பட்டு அதனை வாதியே நிரூபிக்க வேண்டும் சொல்லப்பட்டுள்ளது. தபசில் சொத்து 1 ம் பிரதிவாதியின் கணவர் பரமானந்தம் என்பவருக்கு 1994 ம் ஆண்டு திருச்செந்தூர் வட்டாட்சியரால் நில ஒப்படைவு மூலம் பாத்தியப்படுத்தி கொடுக்கப்பட்டதாகும். அது முதல் 1 ம் பிரதிவாதியின் கணவர் பரமானந்தம் தபசில் சொத்தில் தகரத்தினால் ஆன ஒரு சிறிய குடில் அமைத்து அனுபவித்து வந்தார். பரமானந்தம் கடந்த 24.04.2014 ல் தபசில் சொத்தினைப் பொறுத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும், உரிமைமாற்று ஆவணமும் பிறப்பித்து



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:05 +0530

வைக்காமல் இறந்து விட்டார். அதன் பின்னர் பரமானந்தத்தின் வாரிசுகளான 1ம் பிரதிவாதி(மனைவி), மக்களான செல்லத்துரை, வசந்தி, சார்லஸ் திரவியகுமார். ஆரோன் முத்துபாண்டி ஆகியோர்கள் தபசில் சொத்தை கூட்டாக அடைந்து அனுபவித்து வருகின்றனர். தபசில் சொத்தில் மேற்படியார்களைத் தவிர வேறு எவருக்கும் எந்தவிதமான உரிமையும், பாத்தியதையும், அனுபவமும் கிடையாது.

ஆ)கடந்த 17.12.2023ல் ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின் காரணமாக தபசில் சொத்திலிருந்த தகரத்தினால் ஆன குடில் சேதமடைந்து வெள்ளத்தில் இழுத்து செல்லப்பட்டது. அது முதல் தபசில் சொத்து காலிமனையாக இருந்து வந்ததில், 1ம் பிரதிவாதி கடந்த 10.07.2024ல் தபசில் சொத்தை சுற்றிலும் கல்தூண் நட்டி, கம்பிவேலி அமைத்தார். தபசில் சொத்தைப் பொறுத்து வாதிகள் முற்றிலும் அந்நியர்களாவர். 1ம் பிரதிவாதி கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் 3வது வாரத்தில் சென்னையிலிருக்கும் அவரது பிள்ளைகளை பார்ப்பதற்கு சென்றதை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு 1ம் வாதி தபசில் சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து அதனைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த கல்தூணை உடைத்து கம்பிவேலியை அப்புறப்படுத்தி சேதம் விளைவித்தார். ஊரில் உள்ள பெரியவர்கள் 1ம் வாதியை எச்சரித்ததால், 1ம் வாதி தபசில் சொத்திலிருந்து வெளியேறினார்.

இ)1ம் பிரதிவாதி கடந்த 10.09.2024ல் ஊருக்கு வந்த போது தபசில் சொத்தில் அமைக்கப்பட்டிருந்த சில கல்தூண்கள் உடைக்கப்பட்டு, கம்பிவேலிகள் சேதப்படுத்தப்பட்டிருப்பதை கண்டு அருகில் உள்ளவர்களிடம் விசாரித்ததில் 1ம் வாதி சேதப்படுத்தியதாக கூறினர். 1ம் பிரதிவாதி 1ம் வாதியை நேரில் சந்தித்து கேட்டதற்கு தபசில் சொத்து 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது போல் உரிமை கொண்டாடி, கல்தூண்களையும், கம்பி வேலிகளையும் 1ம் வாதி தான் சேதப்படுத்தியதாகவும், முடிந்ததை பார்த்துக்கொள் என்றும் அடாவடித்தனமாக பேசினார். 1ம் பிரதிவாதி 1ம் வாதி மீது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப் போவதாக கூறினார். அதிலிருந்து



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:08 +0530

தப்பித்துக் கொள்வதற்காக தபசில் சொத்துக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத 1ம் வாதி தபசில் சொத்தைப் பொறுத்து ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முன்னெச்சரிக்கை மனு(Caveat) தாக்கல் செய்திருப்பது போல் 1ம் பிரதிவாதியை பயமுறுத்தும் விதமாக முன்னெச்சரிக்கை மனுவை 1ம் வாதி வழக்கறிஞர் மூலம் பதிவு தபாலில் அனுப்பினார்.

ஈ)1ம் வாதி தபசில் சொத்தில் இருந்த கல்தூண், கம்பிவேலியை சேதப்படுத்தி பிரதிவாதிகளுக்கு இழப்பு ஏற்படுத்தினார். 1ம் பிரதிவாதி 07.10.2024ல் அவரது வழக்கறிஞர் மூலம் தபசில் சொத்தின் பாத்தியதைக்கும் உரிமைக்கும் அனுபவத்திற்கும் இடையூறு செய்யக்கூடாதெனவும், தபசில் சொத்தில் கல்தூண், கம்பிவேலியை சேதப்படுத்திய வகைக்கு இழப்பீடு செலுத்தும்படிக்கும், 1ம் வாதிக்கு அறிவிப்பு அனுப்பினார். 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 09.10.2024ல் 1ம் வாதி பெற்றுக் கொண்டுள்ளார். ஆனால், 1ம் வாதி பதில் எதுவும் அனுப்பவில்லை. தபசில் சொத்திற்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஆவணங்களை மோசடியாக உற்பத்தி செய்து பொய்யான சங்கதிகளை கூறி தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கதுடன் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 35ன் கீழ் வாதிகள் பிரதிவாதிகளுக்கு ரூ.10,000/—நஷ்ட ஈடு செலுத்த கடமைப்பட்டுள்ளனர்.

4. **<u>எழுவினாக்கள்</u>**

வழக்குரை, எதிர் வழக்குரைகள் மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. தாவா சொத்து தாவா தேதியில் வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறதா?
2. வாதிகளின் அனுபவத்தினை பிரதிவாதிகள் இடையூறு செய்து வருகிறார்களா?
3. வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:11 +0530

4. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரங்கள் என்ன?

5. வாதி தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 9 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.சா.1 ஆகவும், குட்டி பாண்டியன் என்பவர் பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1, 2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**எழுவினாக்களுக்கான தீர்வு**

6. தபசில் சொத்தானது வெள்ளமடம் கிராமம், வைத்தியலிங்கபுரம் ஊரில் நத்தம் பழைய சர்வே எண்.475/2 புதிய சர்வே எண். 475/24ல் அமைந்துள்ளதாக சொத்து விவரம் தெரிவிக்கிறது. தாவா வழக்கானது தபசில் சொத்தில் வாதிகளின் அமைதியான அனுபவத்தினை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தபசில் சொத்தில் கதவு எண் 8/73A உள்ளதாக சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ள போதிலும் தபசில் சொத்தில் தாவா தேதியில் வீடு இருப்பதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் இல்லை. தபசில் சொத்தானது 1ம் வாதியின் மனைவியும் 2, 3ம் வாதிகளின் தாயாருமான மல்லிகாவுக்கு அனுபவத்தின் அடிப்படையில் 2004ம் ஆண்டு முதல் பாத்தியப்பட்டதாக வழக்குரை தெரிவிக்கிறது.

7. மேற்படி மல்லிகா கடந்த 20.01.2010ம் தேதி கதவு எண் 2141 வைத்தியலிங்கபுரம், வெள்ளமடம் கிராமத்தில் வைத்து இறந்து விட்டார் என்று வா.சா.ஆ.4 இறப்புச் சான்றிதழ் தெரிவிக்கிறது. இறந்து போன மல்லிகாவுக்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று திருச்செந்தூர் வட்டாட்சியர் வழங்கியுள்ள வா.சா.ஆ.5 வாரிசு சான்றிதழிலிருந்து உறுதியாகிறது. வா.சா.ஆ.8 நத்தம் நிலவரித் திட்ட தூய அடங்கல் பதிவேட்டிலிருந்து தபசில் சொத்தின் சர்வே எண்.475/24 ஆனது யாருடைய பெயரிலும் பதிவு இல்லாமல் காலி மனையாக சர்க்கார் மனை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 வாக்காளர் அடையாள அட்டை மற்றும் வா.சா.ஆ.3 ஆதார்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:15 +0530

அட்டை ஆகியவற்றிற்கும் தபசில் சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று வா.சா.1 குறுக்கு விசாரணையில் ஒத்துக் கொண்டுள்ளார்.

8. கதவு எண் 8/73A க்கு வரி விதிப்பு எண். 1142 வாயிலாக 24.06.2004 ம் தேதி 1ம் வாதியின் மனைவி மல்லிகா பெயரில் வா.சா.ஆ.1 வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டுள்ளது. வா.சா.1ன் குறுக்கு விசாரணையில், "**வெள்ளமடம் ஊராட்சிமன்றத்தலைவரை விசாரித்தால் வா.சா.ஆ.1 வீட்டு வரி ரசீது எந்த இடத்தில் இருந்த வீட்டிற்குரியது என்று துலங்கும் என்றால் சரிதான். பஞ்சாயத்து அலுவலரை எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்கிறேனா என்றால் தலைவர் கிடையாது கிளார்க் வருவார்**". என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், வரிவிதிப்பு பதிவேடு எதுவும் நகல் பெற்று தாக்கல் செய்யப்படவில்லை. சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ள 8/73A வீடானது என்ன ஆனது என்பது குறித்து வழக்குரையில் எந்த சங்கதியும் இல்லை. தற்போதும் மேற்படி 8/73A வீட்டினை வாதிகள் நிரந்தர முகவரியாக கொண்டு வைத்தியலிங்கபுரத்தில் பள்ளிக்கூட தெருவில் கதவு எண் 21ல் வசித்து வருவதாக வழக்குரை நெடுந்தலைப்பு(Long cause title)தெரிவிக்கிறது. ஆனால் 2010ல் 1ம் வாதியின் மனைவியான மல்லிகா இறந்த போதே அவரது நிலையான வீட்டு முகவரியின் கதவு எண் 21-41 என்று தற்போதைய 21ஆம் எண்ணை குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

9. கதவு எண் 8/73A கொண்ட வீடு தற்போதும் இருந்து வருவதாக வழக்குரை தெரிவிக்கும் நிலையில் அது தொடர்பான 2004ம் ஆண்டுக்குப் பின்னர் வீட்டு வரி ரசீதுகள் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.9 வெள்ளமடம் ஊராட்சிமன்றத் தலைவர் ஜாஸ்மின் என்பவர் 04.09.2024ம் தேதி 1ம் வாதியின் மனைவிக்கு சொந்தமான கதவு எண் 8/73A கொண்ட வீடானது இருந்து வந்ததாகவும், மேற்படி வீட்டிற்கு 2004-2005 முதல் 2015-2016 வரையில் வீட்டு வரி செலுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் பிறகு மேற்படி மண்சுவர் குடிசை வீடானது அழிவு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:17 +0530

நிலைக்கு கொண்டு செல்லப்பட்டு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் சான்று வழங்கியுள்ளதாக தெரிவிக்கிறது.

10.மேற்படி வா.சா.ஆ.9 ஆவணமானது சம்பந்தப்பட்ட ஊராட்சிமன்றத் தலைவர் வாயிலாக நிரூபணம் செய்யப்படவில்லை. 2004ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரையில் தொடர்ச்சியாக வரிவிதிப்பு செலுத்தப்பட்டு வந்ததற்கான வரி ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கான காரணம் வழக்குரையில் சொல்லப்படவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.9 தபசில் சொத்திற்குரியது என்றும், ஊராட்சிமன்றத் தலைவரால் வழங்கப்பட்டுள்ளது என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை. ஒரு ஆவணத்தை தாக்கல் செய்வது மட்டுமே அதனை நிரூபிப்பதற்கு சமமானதாக எடுத்துக் கொள்ள முடியாது.

11.தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உதவி செயற்பொறியாளர்(விநியோகம்), நாசரேத் 1ம் வாதியின் மனைவி மல்லிகாவுக்கு அனுப்பிய கடிதம் என்று வா.சா.ஆ.7 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7ல் குடிசை மின் விண்ணப்ப பதிவு எண்.33/04.05 கதவு எண் 8/73A வடக்கு தெரு ஆய்வு செய்யப்பட்ட பொழுது மாட்டுத் தொழுவமாக உள்ளதால் விண்ணப்பம் ரத்து செய்யப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டு 25.08.04ல் மேற்படி வா.சா.ஆ.7ஐ தபசில் சொத்திற்கானது தான் என்று வா.சா.ஆ.7 வழங்கப்பட்ட அலுவலகத்தின் வாயிலாக வாதிகளால் நிரூபிக்கப்படவில்லை. மேற்படி வா.சா.ஆ.7 சம்பந்தப்பட்ட கோப்பு நகல் பெற்று தாக்கல் செய்யப்படவில்லை. நாசரேத் உதவி செயற் பொறியாளர் அனுப்பிய கடிதமானது நாசரேத் அஞ்சலக முத்திரையைத் தவிர தென்திருப்பேரை, அனந்தபுரம், திருவைகுண்டம் அஞ்சல் நிலையங்களின் முத்திரைகள் உள்ளன.

12. வா.சா.ஆ.7 நாசரேத் அஞ்சல் அலுவலகத்தில் தபால் போடப்பட்டிருந்ததற்கான எந்த முத்திரையும் இல்லை. வா.சா.ஆ.7 கடிதத்தினை அனுப்பிய உதவி செயற்பொறியாளரின் பெயர் அதில் குறிப்பிடப்படவில்லை. இத்தகு சூழ்நிலையில்



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:20 +0530

வா.சா.ஆ.7 நாசரேத் மின் வாரிய அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டிருக்குமா? என்ற சந்தேகம் எழுகிறது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மின் வாரிய அலுவலகத்தினர் வாதிகள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. மேற்படி வா.சா.ஆ.7 ல் கதவு எண்.8/73A வீடு இருந்தததாக குறிப்பிட்டுள்ளது மட்டுமே மேற்படி வீடு தபசில் சொத்தில் இருந்தது என்பதை நிரூபிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், வா.சா.ஆ.1 வீட்டு வரி ரசீது 2004–2005 ம் ஆண்டில் ஏற்பட்டதற்கு பின்னிட்டு எந்த ஒரு வரி ரசீதும் தாக்கல் செய்யப்படவில்லை.

13.வழக்குரையில் கதவு எண்.8/73A ல் வாதிகள் நிரந்தரமாக வசித்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அது சம்பந்தமாக குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, ஆதார் அட்டை போன்ற எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, கதவு எண்.8/73A ஐ வாதிகள் நிரந்தர முகவரியாக கொண்டு வசித்து வந்தனர் என்ற சங்கதி நிரூபிக்கப்படவில்லை. தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தை நிரூபிக்கும் வகையில் தாவா கிராமத்தில் யாரும் விசாரிக்கப்படவில்லை. வா.சா.ஆ.1 வீட்டுவரி ரசீதில் கண்ட வீடு தபசில் சொத்தில் இருந்திருந்தால் ஏன் வா.சா.ஆ.1 க்கு பின்னிட்டு எந்த வரி ரசீதும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை.

14.வா.சா.ஆ.6 புகைப்படம் தபசில் சொத்தில் வாதிகளின் அனுபவத்தினை காண்பிப்பதற்கான ஆவணமாக எடுத்துக் கொள்ள முடியாது. வழக்குரையில் 18.07.2024 ம் தேதி பிரதிவாதிகள் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததாகவும், 2018–2019 ல் 1ம் வாதி தபசில் சொத்தில் பென்சிங் வேலி அமைத்துள்ளதாகவும், மீண்டும் 2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் வாதி கம்பி வேலி அமைக்க முயன்ற போது பிரதிவாதிகள் தடுத்து இடையூறு செய்ததாகவும், இது தொடர்பாக நாசரேத் காவல் நிலையத்தில் 1ம் வாதி கொடுத்த புகார் மனுவினை வாங்க மறுத்து விட்டதாகவும் சங்கதிகள் மற்றும் வழக்குமூலம் முன்னிடப்பட்டு தாவா வழக்கு



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:23 +0530

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நாசரேத் காவல்நிலையத்தில் வாங்க மறுக்கப்பட்ட 1ம் வாதி கொடுத்த புகார் மனு தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கு எதிராக 1ம் வாதி எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. தாவா வழக்கானது 14.10.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட்ட பின்னர் 28.10.2024ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

15.இடைகாலத்தில் 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் வாயிலாக 07.10.2024ம் தேதியிட்டு 08.10.2024ம் தேதி 1ம் வாதிக்கு பி.சா.ஆ.1 அறிவிப்பு அனுப்பியுள்ளார். அதில் தபசில் சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பி.சா.ஆ.1 அறிவிப்பினை 1ம் பிரதிவாதி 09.10.2024ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்று பி.சா.ஆ.2 ஒப்புதல் அட்டை தெரிவிக்கிறது. வழக்குரையானது 14.10.2024ம் தேதி தயார் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி பி.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து வாதிகள் வழக்குரையில் முணுமுணுக்கவில்லை. பி.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு வாதிகள் எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை.

16.பி.சா.ஆ.1 அறிவிப்பினை பெற்றுக் கொண்ட பிறகு 1ம் வாதி முன்னெச்சரிக்கை மனு தாக்கல் செய்த நிலையில் அது குறித்தும் வழக்குரையில் எந்த சங்கதியும் முன்னிடவில்லை. தபசில் சொத்திற்கு கிழக்கு மற்றும் தெற்கில் 1ம் பிரதிவாதியின் காலி மனை இருந்து வருவதாக வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கு விரோதமான சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. நாசரேத் காவல்நிலையத்தில் 1ம் வாதியின் புகார் மனுவினை வாங்க மறுத்து உரிமையியல் பிரச்சனை என்று நீதிமன்றத்தை அனுகுமாறு சொல்லிவிட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் அதற்கு முற்றிலும் விரோதமாக நாசரேத் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகாருக்கான ரசீது மற்றும் மனு நகல் வீட்டில் உள்ளதாகவும் காவல்துறையினர் விசாரித்ததாகவும், கடந்த வருடம் புகார் கொடுத்ததாகவும் தேதி ஞாபகம் இல்லை என்றும் வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளார்.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:26 +0530

நாசரேத் காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்றுள்ளது என்று வா.சா.1ன் சாட்சியத்திலிருந்து தெள்ளத்தெளிவாகிறது. இதிலிருந்து வாதிகளின் வழக்கு மூலம் பொய் என்றாகிறது. அதாவது நாசரேத் காவல்நிலையத்தில் புகார் மனுவினை வாங்க மறுத்து நீதிமன்றத்தில் தீர்வு காணுமாறு சொல்லியுள்ள சங்கதியானது வழக்குமூலத்திற்கானது என்று தெளிவாகிறது.

17.வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள நாசரேத் காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் மனு, அதற்கான ரசீது மற்றும் அது சம்பந்தப்பட்ட கோப்பு தாக்கல் செய்யப்பட்டால் வாதிகளுக்கு பாதகமாக அமையும் என்பதால் தான் அவைகளை வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது. வாதிகள் 1ம் பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக் கொண்டு அதனை மறுக்கும் வகையில் எந்த சங்கதிகளையும் முன்னிடாமல் மேற்படி அறிவிப்பினை மறைத்து தாவா வழக்கினை தாக்கல் செய்துள்ளனர் என்று தெளிவாகிறது. 2008ம் ஆண்டிலிருந்து பிரதிவாதிகள் 1ம் வாதியின் அனுபவத்தினை இடைஞ்சல் செய்து வந்ததாக வழக்குரையில் சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக வாதிகள் எந்த நடவடிக்கையும் எடுத்ததற்கான சாட்சியமும், சான்றாவணமும் இல்லை.

18.தபசில் சொத்திலிருந்ததாக கூறும் மண்ணால் ஆன குடிசை வீடு 2021ம் ஆண்டு மழையில் அழிந்துவிட்டதாக வா.சா.1ன் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள நிலையில், அதன் பின்னிட்டு 3 ஆண்டுகள் கழித்து தாக்கல் செய்த தாவா வழக்கில் மேற்படி முக்கிய பொருண்மையை மறைத்துள்ளனர். அதாவது, தபசில் சொத்து கதவு எண்.8/73A இருப்பதாகவே சங்கதி மற்றும் சொத்து விவரம் முன்னிட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதியின் மனைவி தபசில் சொத்தில் எந்த வருடம் வீடு கட்டினார் என்று கேட்கப்பட்டதற்கு அது வீடு இல்லை மண்சுவர் கொண்ட குடிசை என்று வா.சா.1 சொல்லியுள்ளார். மேற்படி மண்சுவர் கொண்ட குடிசை எந்த ஆண்டு கட்டப்பட்டதற்கு எந்த சாட்சியமும் இல்லை.



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:29 +0530

19.வா.சா.ஆ.6 புகைப்படம் மட்டுமே தபசில் சொத்திலுள்ள பென்சிங் வேலியை வாதிகள் தான் ஏற்படுத்தியுள்ளனர் என்பதற்கு போதுமான ஆதாரமாகாது. மேற்படி பென்சிங் வேலி அமைத்துக் கொடுத்தவர் யாரும் சாட்சிகளாக வாதிகள் தரப்பில் விசாரிக்கப்படவில்லை. தபசில் சொத்தில் வாதிகள் ஆடு மாடுகள் கட்டி அனுபவித்து வருவதாக எந்த சங்கதியும் இல்லை. இதற்கு விரோதமாக பி.சா.2 யிடம் வாதிகள் ஆடு மாடுகள் கட்டி அனுபவித்து வருவதாக முன் வைக்கப்பட்டுள்ள கேள்வியானது வாதுரை சங்கதிகளுக்கு விரோதமானதாகும். பி.சா.2 ன் குறுக்கு விசாரணையில் வாதிகள் ஆடு, மாடுகள் கட்டி அனுபவித்து வருவதாக ஒத்துக் கொள்ளவில்லை. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில் தபசில் சொத்து தாவா தேதியில் வாதிகள் வசம் இருந்து வருகிறது என்று வாதிகள் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20.எதிர்வழக்குரையில் தபசில் சொத்தானது 1ம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையுமான பரமானந்தத்திற்கு திருச்செந்தூர் வட்டாட்சியரால் நில ஒப்படைவு மூலம் பாத்தியப்படுத்திக் கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. தபசில் சொத்தானது நத்தம் நிலமாகும். தபசில் சொத்தின் கிழக்கு மற்றும் தெற்கில் ஏற்கனவே, பிரதிவாதிகளுக்கு காலி மனை உள்ளது. இந்நிலையில், கிராம நிர்வாக உதவியாளராக இருந்த அரசு ஊழியரான மேற்படி பரமானந்தத்திற்கு திருச்செந்தூர் வட்டாட்சியர் ஒப்படைவு செய்து கொடுத்தார் என்ற சங்கதி நம்பும்படி இல்லை. இதனை வலுப்படுத்தும் வகையில் மேற்படி ஒப்படைவு உத்தரவு பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்படவில்லை. பி.சா.1 ன் குறுக்கு விசாரணையில் வட்டாட்சியர் அவரது கணவருக்கு கொடுத்த ஆவணம் உள்ளதாக சொல்லியுள்ள போதிலும் அதனை தாக்கல் செய்யவில்லை.

21.வா.சா.ஆ.8 நத்தம் நிலவரித் திட்ட துூய அடங்கல் பதிவேட்டில் தபசில் சொத்து சர்கார் காலி மனை என்றுள்ளது. ஆகவே, தபசில் சொத்து மேற்படி பரமானந்தத்திற்கு நில



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:32 +0530

ஒப்படைவு மூலம் பாத்தியப்பட்டது எனும் சங்கதி பொய் என்றாகிறது. 2014 ல் 1ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பிறகு வட்டாட்சியரிடம் எந்த மனுவும் கொடுக்கவில்லை என்று ஒத்துக் கொண்ட பி.சா.1 பட்டா உள்ளதாக சொல்லியுள்ள நிலையிலும் அதனை தாக்கல் செய்யவில்லை. தபசில் சொத்தில் கம்பி வேலி போட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ளது என்று உபயதரப்பு சாட்சியங்களிலிருந்து உறுதியாகிறது. ஆனால், மேற்படி கம்பி வேலியை யார் அமைத்தார் என்பதற்கு தெளிவான ஏற்றுக் கொள்ளத் தக்க நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை.

22.நத்தம் வகைப்பாட்டினைச் சார்ந்த சர்கார் காலிமனை என வகைப்பாடு செய்யப்பட்ட தபசில் சொத்து என்ன காரணத்திற்காக காலி மனையாக விட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிக்கும் வகையில் உள்ளாட்சி துறையினர் மற்றும் வருவாய்துறையினர் உபயவாதிகள் தரப்பில் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. மேற்படியார்கள் தாவா வழக்கில் தரப்பினர்களும் கிடையாது. யார் கம்பி வேலி போட்டு அடைத்துள்ளனர் என்று நிரூபணமாகாத நிலையில் தபசில் சொத்தானது பொது பயன்பாட்டிற்கான இடமாக தான் எடுத்துக் கொள்ள முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில், ஒரு நகர் அல்லது கிராமம் உருவாகும் போது அதன் எதிர்கால தேவைகளுக்காக குறிப்பிட்ட இடம் ஒதுக்கப்படுவது வழக்கமாகும். அதனால் தான் வா.சா.ஆ.8 அடங்கல் பதிவேட்டில் தபசில் சொத்தானது சர்க்கார் காலி மனை என்றுள்ளது.

23.தபசில் சொத்து சம்பந்தமாக இருதரப்பினரும் பட்டா வழங்கக் கேட்டு எந்த நடவடிக்கையும் எடுத்ததற்கான சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவா கிராமத்தில் உபயவாதிகள் இருவருக்கும் ஏற்கனவே நத்தம் மனை இடங்கள் உள்ளன. அதனால் தான் உபயவாதிகள் தபசில் சொத்திற்கு பட்டா கேட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அறிய முடிகிறது. தபசில் சொத்து பிரதிவாதிகளின் தனித்த அனுபவத்தில் இருந்து வருவதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:34 +0530

மற்றும் நம்பத்தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணம் இல்லை. பி.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பி.சா.ஆ.2 ஒப்புதல் அட்டை ஆகியவை தபசில் சொத்தில் பிரதிவாதிகளின் அனுபவத்தினை காண்பிப்பதற்கான ஆவணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

24.தபசில் சொத்திற்கு அருகில் உள்ள பிரதிவாதிகளின் நிலத்துடன் தபசில் சொத்தினையும் அனுபவித்து வருவதாக முன் வைக்கப்பட்ட கேள்விக்கு வா.சா.1 சரியல்ல என்று மறுத்துள்ளார். தபசில் சொத்திற்கு அருகில் கிழக்கு மற்றும் தெற்கில் பிரதிவாதிகளின் மனை உள்ள நிலையில் தபசில் சொத்திற்கு மட்டும் பென்சிங் அமைக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை. மேலும், பி.சா.2 தபசில் சொத்தில் யார் கம்பி வேலி போட்டு அடைத்துள்ளார் என்று தெரியாது என்றும், பரமானந்தம் அடைத்துள்ளதாக சொன்னார்கள் என்றும், அதனை பார்க்கவில்லை என்றும் கேள்வி நிலை சாட்சியாக பதிலளித்துள்ளார்.

25.இருதரப்பினரும் தபசில் சொத்தில் சட்டப்படியான உரிமை மூலம் இல்லாமல் அனுபவத்தின் அடிப்படையில் பாத்தியம் கோருகின்றனர். இந்நிலையில் விளம்புகைப் பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் மட்டும் வழங்க இயலாது. மேலே விவாதித்துள்ள காரணங்களின் அடிப்படையில், தபசில் சொத்து தாவா தேதியில் வாதிகளின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இல்லை என்று எழுவினா1 க்கும், வாதிகளின் அனுபவத்தினை பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்று எழுவினா2 க்கும், வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா3 க்கும், வாதிகளுக்கு கிடைக்கத்தக்க இதர பரிகாரம் எதுவும் இல்லை என்று எழுவினா4 க்கும் தீர்வு காணப்படுகிறது.

**26.முடிவாக,**

**தாவா வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:38 +0530

TNTT080001562024

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:39:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>:

வா.சா.1 –வேம்பு

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | வா.சா.ஆ.1 | | 1ம் வாதியின் மனைவி மல்லிகா தபசில் சொத்திற்கு செலுத்திய வீட்டு வரி ரசீதின் அசல். |
| 2 | வா.சா.ஆ.2 | | 1ம் வாதியின் வாக்காளர் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 3 | வா.சா.ஆ.3 | | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. |
| 4 | வா.சா.ஆ.4 | | மல்லிகாவின் இறப்பு சான்றின் உண்மை நகல் |
| 5 | வா.சா.ஆ.5 | | மல்லிகாவின் இறப்பிற்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றின் உண்மை நகல் |
| 6 | வா.சா.ஆ.6 | | வாதிகள் தரப்பில் பென்சிங் வேலி அமைக்கப்பட்டதற்கான புகைப்படம் |
| 7 | வா.சா.ஆ.7 | | குடிசை வீட்டிற்கு மின் இணைப்பு கேட்டு மல்லிகா கொடுத்த மனு நிராகரிக்கப்பட்டதற்கான கடிதம் |
| 8 | வா.சா.ஆ.8 | 04.09.2024 | வெள்ளமடம் ஊராட்சிமன்றத் தலைவர் வழங்கிய சொத்து வரி செலுத்தியதற்கான சான்றின் அசல் |
| 9 | வா.சா.ஆ.9 | – | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏரல் வட்டாட்சியர்அலுவலகத்தில் இருந்து 18.06.2022ம் |



HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:45 +0530

TNTT080001562024

| | | | |
|---|---|---|---|
| | | | தேதி 1ம் வாதிக்கு அனுப்பப்பட்ட தகவல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்</u>

பி.சா.1–லேயாள் முத்தம்மாள்
பி.சா.2–குட்டி பாண்டியன்

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | பி.சா.ஆ.1 | 07.10.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 2. | பி.சா.ஆ.2 | – | அஞ்சல் ஒப்புதல் அட்டை |

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.29 12:38:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஸ்ரீவைகுண்டம்.

TNTT080001562024

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
ஸ்ரீவைகுண்டம்.
வரைவு/சீரான – தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.136/2024
நாள்.29.04.2026